# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## அறிவிப்பு

## இரட்டை குளம் - மீன் வளர்க்க ஒப்பந்த புள்ளி கோருதல்

**(03 ஆண்டுகள் - அக்டோபர்-2023 முதல் செப்டம்பர்-2026 வரை)**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான இரட்டை குளம் மற்றும் சிறுவர் பூங்கா குளம் ஆகிவற்றில் மீன் வளர்த்தல் மற்றும் தென்னை மகசூல் குத்தகை தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைய தளத்தில் **15.09.2023** நாள் முதல் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பல்கலைக்கழக இணையதள முகவரி : **www.annamalaiuniversity.ac.in**

| | | |
|---|---|---|
| **ஒப்பந்தப் புள்ளி ஒட்டப்பட்ட நிலையில் சமர்ப்பிக்கும் நாள் மற்றும் நேரம்** | : | **15.09.2023 முதல் 29.09.2023-ம் தேதி பிற்பகல் 11.00 மணிக்குள்.** |
| **இடம்** | : | **பதிவாளர் அலுவலகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.** |
| **ஒப்பந்தப் புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்** | : | **29.09.2023 பிற்பகல் 11.30 மணி.** |

**பதிவாளர் (பொ.)**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள இரட்டைக்குளம் மற்றும் சிறுவர் பூங்கா அருகில் உள்ள குளம் இவைகளை பாதுகாத்து பராமரித்து மீன் மற்றும் தேங்காய் மகசூல் செய்வதற்கான 03 ஆண்டுகள் (அக்டோபர்-2023 முதல் செப்டம்பர்-2026 வரை) குத்தகை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் கோரப்படுகின்றது.

1. குறைந்தபட்ச குத்தகை தொகை **ரூ. 3,00,000/-** (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) ஆகும்.
2. குத்தகை காலம் 03 ஆண்டுகள், இரண்டாம் ஆண்டு முதலாம் ஆண்டு தொகையிலிருந்து 10% கூடுதலாகவும், மூன்றாம் ஆண்டு இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையிலிருந்து 10% கூடுதலாகவும் வசூலிக்கப்படும். மூன்று ஆண்டிற்கான மொத்த குத்தகை தொகையையும் ஒப்பந்த கால தொடக்கத்திலேயே முழுமையாக செலுத்த வேண்டும்.
3. குளங்களிலும் சுற்றியுள்ள வேலி மற்றும் மரங்களையும் தற்போது உள்ள நிலையிலேயே குத்தகை கால முடிவில் ஒப்படைக்க வேண்டும்.
4. தேவையானபோது மீன் பிடிக்கவோ, மீன்களை குளத்தில் விடவோ, தேங்காய்களை பறித்துக்கொள்ளவோ அனுமதிக்கப்படுகிறது.
5. குளங்களை தங்கள் செலவில் பாதுகாத்து பராமரித்துக்கொள்ளவேண்டும்
6. எக்காரணத்தைக்கொண்டும் குளத்திலிருந்து நீரை வெளியேற்றக்கூடாது.
7. பரங்கிப்பேட்டையில் இயங்கும் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின புலத்தின் ஆலோசனை பெற்று மீன் வளர்ப்பு மற்றும் குளங்களை பராமரிக்க வேண்டும். அப்புலத்தின் இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் படிப்பு சம்பந்தமாக மீன் வளர்ப்பிற்கு எந்தவித குந்தகமும் இன்றி குளங்களை பயன்படுத்திக்கொள்வார்கள்.
8. குளத்தில் அங்கக (Organic), அனங்காக (in-Organic), இடும் இடு பொருள்கள் சுற்று சூழலுக்கு எவ்வித குந்தகமும் விளைவிக்ககூடாது.
9. குளங்களை தவிர பிற இடங்களை உபயோகிக்ககூடாது.
10. குத்தகை விடப்பட்ட எல்லைக்குள் எந்தவித கட்டுமான வேலைகளையும் செய்யக்கூடாது.
11. மின்சார இணைப்பு இது சம்பந்தமாக பல்கலைக்கழகத்திலிருந்து தரப்பட மாட்டாது.
12. பல்கலைக்கழக அனுமதி இல்லாமல் உள்குத்தகைக்கு பிறருக்கு விட அனுமதி இல்லை.
13. குளங்களின் இருபுற கரைகளிலிலும் கருவேலமரங்கள் இல்லாமல் பாதுகாத்திடவேண்டும்.
14. மேற்கூறிய எந்த நிபந்தனைகளை மீறினாலும் பல்கலைக்கழக நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் விதமாக நடந்து கொண்டாலும் குத்தகை ஒப்பந்தம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
15. குத்தகை விருப்ப மனுவை எவ்வித காரணமின்றி ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ பல்கலைக்கழக பதிவாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

மேற்கண்ட நிபந்தங்களை ஏற்றுக்கொண்டு குத்தகை எடுக்க விருப்பம் உள்ளவர்கள் எதிர்வரும் **15.09.2023** முதல் **29.09.2023-ம் தேதி பிற்பகல் 11.00 மணிக்குள்**, உங்கள் குத்தகை தொகையுடன் கூடிய ஒப்பந்தப் புள்ளியை **ஒட்டப்பட்ட உரையில்** ”பதிவாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்” அவர்களுடைய அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

**பதிவாளர் (பொ.)**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

# இரட்டை குளம் - மீன் வளர்க்க ஒப்பந்த புள்ளி

03 ஆண்டுகள் (அக்டோபர்-2023 முதல் செப்டம்பர்-2026 வரை)

1) பெயர் :

2) தந்தையின் பெயர் :

3) நிரந்தர முகவரி :

4) கைபேசி எண் :

5) ஆதார் எண் (நகலை இணைக்கவும்) :

6) பல்கலைக்கழக ஒப்பந்தங்களில் பங்கேற்ற முன் அனுபவம் : உண்டு / இல்லை

7) கோரும் முதலாம் ஆண்டு குத்தகை தொகை (எண்ணால் மற்றும் எழுத்தால்) : ரூ.

பல்கலைக்கழக ஒப்பந்தம் தொடர்பான நிபந்தனைகளை படித்து அறிந்துகொண்டு பல்கலைக்கழகம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி படிவத்தை சமர்ப்பிக்கின்றேன்.

நாள் :

இடம் : கையொப்பம்